# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஐப்பசி மாதம் 15ம் திகதி முதல் 21ம் திகதி வரை

***"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்"***

(புனித லூக்கா 1:45)

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்

- புபுது பாடல் இல 07 "தூய ஆவியே எம் மனதை…."
  இப் பாடலை பாடியவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
- எபேசி 5:20 **"நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்."**
  கணப்பொழுது இந்த வார்த்தைகள் முன்னலையில் தோன்றி நிற்போம். அமைதியாக இக்கணமும் எனது, உங்களது வாழ்வின் ஒரே ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவா? தூய ஆவியானவரால் வழிநடத்தப்படும் அனுபவத்திலா நீங்களும் நானும் எம் வாழ்வினை கழிக்கின்றோம்? வேறு ஒன்று,வேறு நபர், வேறு நிகழ்வுகளா எம்மை வழிநடத்துகின்றன?
- இதோ இப்பொழுது தூய ஆவியானவருக்கு விழிப்புறுவோம். உளந்திறப்போம். இடமளிப்போம். அத்துடன் தூய ஆவியானவரோடு புகழ்சசிக்கு, தூய ஆவியின் பாடுதலுக்கு இடமளித்தவாறு தூய ஆவியின் வரங்கள் கொடைகளை அனுபவிக்கும் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

02. கடந்தவார நற்செய்தியை முன்கொண்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்க.

03. நாளுக்கரிய நற்செய்தி

- புனித லூக்கா 1:36-37 மற்றும் 1:39-45,56 பொதுவில் வாசிக்கவும்.
- சிறு குழுக்களாக பிரிந்து மீண்டும் அப் பகுதிகளை வாசித்து அதனைக் குறித்து சங்கமமாக்குவோம்.
- பின்னர் சிறு சங்கங்கள் சிலவற்றின் அனுபவங்களை பொதுவில் பகிர்ந்து கொள்வோம்.

04. வெளிப்பாடுகளை உரிமையாக்கிக் கொள்வோம்.

- புனித லூக்கா 1:36-37 வானதூதர் வெளிப்படுத்திய இந்தவார்த்தைகள் வழியாக தேவதாய் தெரிந்து கொண்ட செய்திகளாவனளூ

- தனது உறவினரான எலிசபேத் வயது முதிர்ந்த மலடியாயிருந்த நிலையில் ஒரு மகனை கருத்தரித்திருப்பதை
- அதன் வழி இறைவன் சர்வ வல்லமை பொருந்தியவரெனவும் அவரால் இயலாதது ஒன்றுமில்லை என்பதையும்….

- புனித லூக்கா 1:39-45,56 தேவதாய் தேவதூதன் வழியாக தெரிந்து கொண்டதுடன் எலிசபேத் அம்மாளை காணச் சென்று அவரோடு மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அதாவது மகன் (ஸ்நாபக அருளப்பர்) பிறக்கும் வரை அவருடன் இருந்தார்.
- தேவதாய் பக்கம் எமது அவதானத்தை செலுத்துவோம். மங்கள வார்த்தை கூறியதுடன் அவர் கர்ப்பவதி ஆகினார். எலிசபேத் அம்மாள் வசித்த இடத்திற்கு சிறிது தூரம் (கி.மீ 85) இருப்பினும் தான் இருக்கும் நிலை குறித்து அஞ்சாது, எடுத்த தீர்மானம் எமக்கு சவாலானது இல்லையா?

- தூய ஆவியானவரால் நிரம்பியிருந்த தேவதாய் எலிசபேத் அம்மாளுக்கு வாழ்த்து கூறும்போது (உங்களுக்கு இறைவன் துணை) எலிசபேத் அம்மாள் தூய ஆவியானவரால் முழுமையாக நிரம்புவதை உணர்ந்தாள்.
- புனித லூக்கா 1:42,43 இங்கு குறிப்பிடுவது அருள்மிப் பெற்றவரே ஆண்டவரின் தாயே என்பது வேவெளிப்பாடு.
- புனித லூக்கா 1:45 அகிலத்தின் தாயும், பேறுபெற்ற தாயும் தேவதாயாவார்.

05. எமது பேரில் (சிறு குழுக்களில் பகிர்ந்து கொள்க)
- இறை தந்தையில், தேவ அன்னைபோல் தங்கியிருக்கிற, ஆசிக்கிற வாழ்வின் பயணமா நாம் கழிப்பது?
- மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கையில் அதற்கு நீங்கள் பதில் கொடுப்பது எவ்வாறு?

உதாரணம் :- மற்றவர்களின் தேவைக்காக மன்றாடுவதற்கு மற்றவர்களுக்காக பொறுப்பேற்பதற்கு அழைப்பு கிடைக்கும் பொழுது….

- ஐவர் கொண்ட சிறு சங்கம், குடும்ப சங்கம தினம், அரை இரா விழிப்பு, முழு இரா விழிப்பு செப வழிபாடுகள், பிரிவுகளாக ஒன்று கூடும் சந்தர்ப்பங்களில் (தாய், தந்தை, இளைஞர், யுவதி, சுமெதி, சுரெந்தி, தம்பதிகள் கூட்டங்கள்) உங்களது பங்களிப்பு எவ்வாறானது? ஒன்று சேர்தலில் குறைபாடுகள் இருப்பினும், எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன?

06. இறுதிப் புகழ்ச்சி
- ‘தேவதாயைப் போல் ஆவதற்கு’ வல்லமையை வேண்டி ஒருவர் ஒருவருக்காக செபிப்போம்.
- புபுது பாடல் இல 229 “என் ஆன்மா ஆண்டவரை….”

## புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஐப்பசி மாதம் 22ம் திகதி முதல் 28ம் திகதி வரை

### *“அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்”*

(புனித யோவான் 2:5)

01. புகழ்ச்சிக்காக
- காலம் நிறைவேறிவிட்டது. இறை அரசு நெருங்கி வந்து விட்டது.
- இக் கணம் இந்த மணித்தியாலம் இறைவனின் அன்பின் வாக்குறுதி (புனித மாற்கு 1:15) எமக்குள் நிறைவேறும் அனுபவிக்கும் மணித்தியாலம் கணம். பூரணமாக வெளிப்பாடாகிய இயேசு ஆண்டவர் எம் மத்தியில் பிரகாசிக்கும் நேரம். நாம் ஒருமனப்பட்டவாறு இக்கணம் எம்மத்தியில் வீற்றிருக்கம் ஆண்டவருக்கு எமது நமஸ்காரத்தைத் தெரிவிப்போம்.
- “இயேசு ஆண்டவர் அல்லேலூயா………”
- தூய ஆவியானவர் பேரில் எமது மனங்களை விழிப்புறச் செய்தவாறு அவருக்கு இடமளிப்போம். எம்மை வழிநடத்துவதற்கு, வழி காட்டுவதற்காக பாடல் புகழ்ச்சியின் வழியாக இறை அன்பிற்கு, இறை வெளிப்பாடுகளுக்கு எமது உள்ளங்களைத் திறப்போம்.

02. வாராந்தப் நற்செய்தி புனித யோவான் 2:1-5 (கானாவூர் திருமணம்)
அந் நற்செய்தி வாசகத்தை வாசித்து கீழ்க்காணும் காரணங்களை முன்கொண்டு புகழ்ச்சிக் கூட்டங்களில் உங்களுக்கு தெரிகின்றவற்றை சிறு குழுக்களில் பகிர்ந்து கொள்ளவும்.

(அ). ஆண்டவர் இயேசுவின் தாரும், இயேசு ஆண்டவரும் தங்கள் சீடருடன் திருமண விருந்தில் கலந்து கொண்டது ஒரு சாதாரண நிகழ்வா?

(ஆ). ''எனது நேரம் இன்னும் வரவில்லை'' தனது தாய்க்கு கூறினாலும் அவரது வேண்டுதலை இயேசு ஆண்டவர் நிறைவேற்றினார்.

(இ). அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' பேறுபெற்ற தாயார் கூறிய இந்த வார்த்தைகள் வழியாக தாயாரது உள்ளாந்திரத்தைக் காணுங்கள்.

03. வார்த்தையின் ஊழியருக்காக

(அ). நிகழ்ந்த அனைத்துமே இறை திட்டத்தின் படியே. தூய ஆவியானவரின் செயல்பாடு மிக மேன்மையாக நிறைவேறியது. துந்தையானவர் தனது மகனை மகிமைக்குட்படுத்தினார். இறை மகிமை வெளிப்பட்ட நேரம் வந்தது. அவ்வண்ணமே இயேசு ஆண்டவரை முன்கொண்டு திருமணவாழ்வு இறை அழைப்பாயினும், அதன் வழியாக இறை திட்டம் நிறைவேறிடும் என்றும் திருமண வாழ்வு ஆசீர்வாத நிலையை நோக்கி உயர்த்தப்பட்டதையும் காணலாம்.

(ஆ). தந்தையானவர் தனது மகனை மகிமை படுத்தியது தனது தாயின் வழியாகவே. பேறுபெற்ற தாயார் தனது மகன் பேரில் வைத்திருந்த விசுவாசம், எதிர்பார்ப்பு ,அன்பு எனும் தர்மங்களை முன்கொண்டு மகிமையின் நேரம் உதயமாகியது. தாழ்நிலையில் வாடுவோருக்கு இறைவனின் இரக்கம், கருணை கிடைக்கும் என்பதனை தாய் அறிந்திருந்தார். இறைவனின் தாயன்பு பற்றி அவரினுள் இருந்தது. ஆழமான அனுபவமே.

(இ). ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' இயேசு ஆண்டவரின் தூதுச் சேவை பூத்துப் பலனளிப்பதைக் காண்பது அவரது தாயின் இதயத்தில் இருந்ததாகமாகும். புதிய திராட்சை இரசம், மிகவும் இனிமையான, மிகவும் விரும்பத்தக்க மகிழ்ச்சி நிறை வாழ்வினை கழிப்பதற்கு வேண்டிய நற்செய்தியின் அடையாளமாகும்.

- பேறுபெற்ற தாயாரும் அன்று கானாஊர் திருமணவிருந்தில் இயேசு ஆண்டவர் செய்த புதுமையின் வழியாக மறைபரப்புபணியினை செய்தார்.
- அவள் அவ்வாறு கூறியது அவளது உள்ளாந்தர அனுபவத்தினை அடித்தளமாக்கிக் கொண்டு அல்லவா?
- இறை விருப்பத்தை நிறைவேற்றுதலின் வழியாக, நினையாத விதத்தில் இறை அசீர்வாதத்தினை அனுபவிக்கும் பாக்கியம் உருவாகும்.

04. வாரம் முழுவதும்

- பலவீனம், பரிதாப நிலைகளை அனுபவிக்கும் போது அதிகதிகமாக இறை விருப்பத்தை தேடுவோம். ஏனெனில் அதன் வழியாக ஆண்டவர் வழி தேடலாம்.
- குடும்பத்தில், சங்கங்களில், சமுதாயத்தில் நிரந்தரமும் வார்த்தைக்கு உளந்திறப்போம்.

05. இறுதி செபம்

- கிறிஸ்த வவாழ்வின் முதன்மை நோக்கமான நற்செய்திக்கு சாட்சிபகர்ந்திட தேவையான வல்லமையை வேண்டி செபிப்போம்.
- புபுது பாடல் இல 381 ''வாரும் படைப்பாளராம் ஆவியே…..''